D.O.P.No.415/2022 தேதி - 24.02.2025

கோ.சா.1–காளிராஜ்

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –

இந்த வழக்கில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட சர்வே எண்.162/3 ஆதியில் அழகம்மாள் மற்றும் சீனிவாசன் என்பவர்கள் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். அழகம்மாள் கணவர் பெயர் முனியாண்டி கோனார். அழகம்மாள், முனியாண்டி கோனாருக்கு 2 பிள்ளைகள். அவர்கள் பெயர்கள் காளிராஜ், சோலைராஜ் ஆகும். என் வழக்குப்படி என்னுடைய தகப்பனார் பெயர் முனியாண்டி கோனார். ஆனால் நான் தாக்கல் செய்த நிரூபணஉரையில் என் தந்தை பெயரை வேலுச்சாமி என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கு நிரூபணஉரையில் சொல்லும் காரணம் என் தந்தை முனியாண்டி கோனார் இறந்த பின்பு என் அம்மா அழகம்மாள், வேலுச்சாமி என்பவரை திருமணம் முடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் அழகம்மாளின் இறப்பு சான்றிதழோ வாரிசு சான்றிதழோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அதற்கு காரணம் எனது தாயார் அழகம்மாள் காக்கிவாடன்பட்டியில் இறந்தார், சொந்தஊர் போத்திரெட்டிபட்டி அதனால் நான் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் கோரி விண்ணப்பம் செய்யும் போது இரு கிராம நிர்வாக அலுவலர்களும் ஒருவர் மற்றவரிடம் விண்ணப்பிக்கும்படி எங்களை திருப்பி அனுப்பிவிட்டதால் என்னால் சான்றிதழ் பெறமுடியவில்லை. ஆர்ஜித அதிகாரி நான் வாரிசு சான்றிதழ் சமர்பிக்காததால் தான் அழகம்மாளுக்க வாரிசுகள் யார் யார் என்று தெரியாமல் ஆர்ஜித நிலத்திற்குண்டான நஷ்டஈட்டுத்தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்றால் சரிதான். தற்போது வரை வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அழகம்மாளின் வாரிசு என்பதற்கு வாரிசு சான்றிதழ் பெற்று தாக்கல் செய்யாதவரை ஆர்ஜித நிலத்திற்குண்டான நஷ்டஈட்டுத்தொகையை

பெறஇயலாது என்றால் சரியல்ல. ஆர்ஜித நிலத்தை பொறுத்து நானும், என் சகோதரனும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டோம் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>